MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.

முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.

VOLUME – III ISSUE - II

FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# பாரதிதாசன் கவிதைகளில் கல்வி

முனைவர் து. சிவசித்ரா

உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,பசுமலை, மதுரை

DOI 10.5281/zenodo.18514158.

**Abstract :**

Preface Education is fundamental to the progress of people, enabling them to excel in customs, civilization, and culture, and to thrive in the political and economic spheres. Only when the people of this country receive this education fully will their needs be fulfilled. There should be no obstacles whatsoever in obtaining such education for anyone. Among the poets who strived with the noble aim of making education accessible to all, Poet Bharathidasan is a notable figure. He captivated the hearts of the people through his speeches and writings, working for the betterment of the lives of the uneducated masses and raising awareness among people isolated by caste, religious, and ethnic differences. Bharathidasan's thoughts and ideas were all centered on the advancement of the Tamil society. With this objective, he propagated his ideas and writings among the people. The idea that education coupled with rational thinking is the tool to transform people was advocated by Thanthai Periyar. By internalizing this and creating poetry, he revolutionized the world of Tamil poetry, thus earning the title "Revolutionary Poet."

**Key Words** :Bharadhidasan – Poet – Education – New Thot

## முன்னுரை

மக்கள் முன்னேற்றம் அடையவும் பழக்கவழக்கங்கள் நாகரிகம், பண்பாடு போன்றவற்றில் சிறந்து விளங்கவும் அரசியல் பொருளாதாரத் துறையில் சிறந்து விளங்கவும் அடிப்படையாய் அமைவது கல்வி ஆகும். இதனை இந்நாட்டு மக்கள் முழுமையாகப் பெறும் போது தான் அவர்களின் தேவை பூர்த்தியடையும். இத்தகைய கல்வி பெறுவதில் யாருக்கும் எந்தவிதமான தடைகளும் இருக்கக் கூடாது.

அனைவருக்கும் பொதுமையான கல்வியாக அமைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் பாடுபட்ட கவிஞர்களில் பாவேந்தர் பாரதிதாசனும் குறிப்பிடத்தக்கவர். படிக்காத பாமர மக்களின் வாழ்வு மேம்படவும், சாதி, மத, இன



http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

பேதங்களால் தனித்து நிற்கும் மக்கள் விழிப்புணர்வு பெறவும், தம்முடைய பேச்சாலும், எழுத்தாலும் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர் பாவேந்தர் பாரதிதாசன்.

பாவேந்தரின் சிந்தனை மற்றும் கருத்துக்கள் அனைவரும் தமிழ்ச் சமுதாயத்தின் மேம்பாட்டைக் கொண்டு அமைந்தன. அந்நோக்கத்தோடு தம்முடைய கருத்துக்களையும், எழுத்துக்களையும் மக்கள் மத்தியில் சென்று பரப்பினார். பகுத்தறிவோடு கூடிய கல்வியறிவே மக்களை மாற்றும் கருவி என்பது தந்தை பெரியாரின் கருத்தாகும். இதனைஉள்வாங்கி கவிதை படைத்து தமிழ்க்கவிதை உலகில் புரட்சி செய்ததாலே இவர் "புரட்சிக் கவிஞர்" என்னும் அடைமொழியை பெற்றார்.

**கல்வியின் சிறப்பு**

கல்லாமையை இல்லாமை ஆக்கி அறிவுத்தீபம் ஏற்றியும், அறியாமையை அகற்றியும் பொல்லாங்கை நீங்கச் செய்வதே கல்வியின்நலம் இதையே பாரதிதாசன்,

**“எல்லோர்க்கும் நல்லின்பம்**
**எல்லோர்க்கும் செல்வங்கள்**
**எங்கும் விளைந்த தென்று**
**கொட்டு முரசே வாழ்வில்**
**காட்டுத் தொலைத்த தென்று**
**கொட்டு முரசே இல்லாமை என்னும் பிணி**
**இல்லாமல் கல்வி நலம்**
**எல்லோர்க்கும் என்று சொல்லி**
**கொட்டு முரசே - வாழ்வில்**
**பொல்லாங்கு தீர்ந்த தென்று**
**கொட்டு முரசே"!**


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

என்று பாடியுள்ளார். இப்பாடலில் பாரதிதாசன் கல்வி என்னும் பெருஞ்செல்வம் உலக மக்களுக்கு நல்லின்பம் தரக்கூடியது என்றும், அனைத்துச் செல்வங்களும் எளிதில் நம் வசம் வந்து எட்டாதகனவுகளையும் எட்டும் படியாகச் செய்ய விளைந்த ஒன்று கல்வியே எனக்கூறி கொட்டடங்கள் முரசினை என்றும், மக்களிடையே இல்லை என்னும் கொடிய நோயைப் போக்கக்கூடிய மருந்தாகக் கல்வி உள்ளது எனக் கொட்டடங்கள் முரசினை என்றும், வாழ்க்கையில் வரும் துன்பங்களை எல்லாம் கல்வி போக்கக்கூடியது எனக் கொட்டுங்கள் முரசினை என்றும் கூறுவதன் வழியாகக் கல்வியின் சிறந்த நலத்தைப் பாரதிதாசன் இப்பாடல் வாயிலாக உலகிற்கு அளித்துள்ளார். மனிதனது அடிப்படை உரிமை கல்வி என்பதையும் வலியுறுத்துகின்றார்.

**“கல்வியினால் மனிதரெல்லாம்**
**திறம் மறப்பார்**
**கல்வியினால் மனித ரெல்லாம்**
**இனம் துறப்பார்”**

என்று கல்வியைக் கற்பதால் மனிதர்களிடையே நிறம், மொழி, இன வேறுபாடுகள் மறந்து அனைவரும் ஒன்றே என்ற ஒற்றுமை ஓங்கி நிற்கும் என்று பாடியுள்ளார்.

**கல்வியின் நோக்கம்**

பாவேந்தர் கல்வியானது அறிவை வளர்க்கும் கருவி என்கிறார்.

“**அறிவை விரிவுசெய் அகண்டமாக்கு**
**விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை”**

கல்வியின் நோக்கம் அறிவை விரிவு செய்து விருத்தியடையச் செய்வதாகும் என்ற கருத்து இதன் மூலம் புலனாகிறது

இதனையே பெரியாரும் கல்வி என்ற பெயரில் எதையாவது கற்பிப்பது தவறு, கல்வி எதற்கு? பெறுவதற்கு. அறிவு எதற்கு? மனிதனை மனிதத் தன்மையோடு பிறருக்கு இன்னல் உண்டாகாமல் வாழ்விக்க என்று குறிப்பிடுகின்றார். மேலும், “கல்வியால் மனிதன் பெறும் அறிவானது அது பிறரை மகிழ்விக்கப்


http://Creativecommons.org//license/by/4.0/.

பயன்படுவதாகவே அமைய வேண்டும் ” என்பதே பாவேந்தர் கருத்தாக அமைகின்றது. இதனையே வள்ளுவர்,

**“தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்”**

என்கிறார்.

கல்வி அறிவை வளர்க்கும் ஆயுதம், அது பிறரை மகிழ்விக்கப் பயன்படுகிறது என்பது இதன் மூலம் உணர்த்தப்படுகிறது.

**குழந்தைக் கல்வி**

இளமையில் கற்றால் பசுமரத்தாணிபோல் பதியும். "பருவத்தே பயிர் செய்" "காலம் பொன் போன்றது வீணாக்காதே" போன்ற கருத்துக்களை மனதில் கொண்டு குழந்தைகளுக்குக் கல்வியின் பெருமைகளைக் கூற வேண்டும். குழந்தைகள் கல்வி பயில்வதால் கல்வியோடு சேர்ந்து ஒழுக்கமும் வளரும். பிறரை மதிக்கும் பண்பும், அன்புடன் பழகுவதற்கும்ஒற்றுமை உணர்வு । வளர்வதற்கும் கல்வி முக்கியமானது. சமுதாயத்தில் சிறந்த மாணவராகத் தலை நிமிரச் செய்வதற்கும், தனது உயர்ந்த குறிக்கோளை அடைவதற்கும், அறியாமை என்னும் நோயைப் போக்குவதற்கும், இன்னும் பிற அனைத்து சிறந்த நன்னடத்தைகளுக்கும் கல்வி என்னும் கருவி சிறந்த பயனைத் தருகிறது. இதை,பாரதிதாசன் குழந்தைகளுக்கு எழுத்துக்களை முதன்முதலில் எப்படிச்சொல்லித் தருவது என்பதையே,

**“அணிலுக்கும் ஆட்டுக்கும் முதலெழுத்தே அ ஆ**
**இலைக்கும் ஈக்களுக்கும் முதலெழுத்தே இ ஈ**
**உரலுக்கும் ஊசிக்கும் முதலெழுத்தே உ ஊ**
**எலிக்கும் ஏணிக்கும் முதலெழுத்தே எ ஏ**
**ஐவருக்கும் சரியான முதலெழுத்தே ஐ தான்**
**ஒட்டகம் ஓணானுக்கு முதலெழுத்தே ஒ ஓ**
**ஔவையார் முதலெழுத்தே ஔ வாகும்பாராய்”**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்று உயிர் எழுத்தைக் கவிதையாக்கி அதைக் குழந்தைகளின் மனதில் எளிதில் புரியும்படி அணில், ஆடு, இலை, ஈ என்றும் குறிப்பிட்டு, பாடல்களைப் பாடியுள்ளார்.

குழந்தைகள் கணிதத்தில் எண்களைப் பாடல் வழிக் கற்பது பற்றியும்பாரதிதாசன்,

**“வேலா எவர்க்கும் தலை ஒன்று**
**மெய்யாய் எவர்க்கும் கண் இரண்டு**
**குலத்தின் முனையோ மூன்று”**

என்று பாடியுள்ளார்.

கணிதத்தைக் சுண்டால் நம் இளைஞர்கள் to பயப்படுகிறார்கள். அவர்களுக்கு இது போன்ற கவிதை வாயிலாகக் கணிதம் பயிற்றுவித்தால் அவர்கள் மகிழ்ச்சியுடன் கற்பார்கள். இப்பாடல் நகைச்சுவையாகவும் அதே சமயம் 1, 2 என்ற கணித எண்களைத் தெரிந்து கொள்ளும் விதத்திலும் எழுதப்பட்டுள்ளது. வேலா என்பவனை அழைத்து அனைவருக்கும் தலை என்பது ஒன்றுதான். எல்லோர்க்கும் கண்கள் இரண்டுதான். சூலாயுதத்தில் உள்ள முனைகள் மூன்று தான் என்று இயற்கையாகக் கூறியுள்ளார்.

தமிழ் என்ற சொல் (1) இனிமை என்ற பொருளிலும் (2) தமிழ்நாடு என்ற பொருளிலும் (3) தமிழ் வீரர் என்ற பொருளிலும் (4) தமிழ் அரசர் என்ற பொருளிலும் பண்டைய செந்தமிழ் இலக்கிய நூல்களில் பயின்று வழங்கி வந்துள்ளதைத் தமிழறிஞர் நன்கறிவர். இப் பொருளெல்லாம் ஒருங்கு திரண்டு ஒன்றிய உருவே நம் பாரதிதாசன் ஆவார். மூடக் கொள்கைகளால் பிணிப்புண்டு, உரிமையை மறந்து, நாட்டை மறந்து,தம் அரசை மறந்து நீண்ட, ஆழ்ந்த உறக்கத்திற்கிடந்த தமிழரைத் தட்டிஎழுப்பித் தமிழரின் பாரதிதாசனன்றோ? மாட்சியைத் தமிழர்க்குணர்த்தியவர் நம்

தமிழ் என்ற சொல் பல்பொருளுந் தருமென்றறிந்த பாரதிதாசன், **"தமிழுக்கு அமுதென்று பேர்"** எனத் தொடங்கியப் பல்பொருளுந் திகழப் பாடி


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

வைத்திருக்கின்றார். துன்பஞ் சேர்க்கையில் அத்துன்பம் நீக்கி இன்பமளிப்பது பாரதிதாசன் பாட்டு, அன்பின்றி வற்றிய நெஞ்சில் ஈரத்தையுண்டாக்கி அன்பினைச் சுரக்கச் செய்வது பாரதிதாசன் பாட்டு.

**"துன்பஞ் சேர்க்கையில் யாழெடுத்து**
**நீ இன்பஞ் சேர்க்க மாட்டாயா? - எமக்**
**கின்பஞ் சேர்க்க மாட்டாய? - நல்**
**லன்பிலா நெஞ்சில் தமிழைப் பாடி நீ**
**அல்லல் நீக்க மாட்டாய? - கண்ணே**
**அல்லல் நீக்க மாட்டாய?"**

எனக் கவிஞர் வினாவிய வழியே விடையும் இறந்துள்ளார். இவ்வின்பப் பாடலை மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்தால் இன்பஞ் சேர்கின்றது.

**இளமைக் கல்வி**

இளமைக் கல்வியானது ஒரு மனிதனை மேம்படுத்தும். அதைத் தாய்மொழியின் வழியாக எளிமையாக வழங்கும் போது மட்டுமே கல்வியின் நிலை மேம்பாடு அடையும் என்று இளமைக் கல்வியின் இன்றியமையாமையை முன் வைக்கிறார். இதையே நாலடியாரில்,

**“கல்லென்று தந்தை கழற அதனை நம்**
**சொல் என்று கொள்ளாது இகழ்ந்தவன்மெல்ல**
**எழுந்தோலை பல்லார முன்நீட்ட விளியா**
**வழுக் கோலைக் கொண்டு விடும்”**

என்ற பாடல் உணர்த்துகிறது.

கற்றுக் கொள்வாயாக என்று தந்தை கூற அதனையொரு சொல் என்று பொருட்படுத்தாது இகழ்ந்தவன், பின்னாளில் பலர் கூடியுள்ள இடத்தில் அவன் இருக்கும் போது எழுத்து எழுதப்பட்டுள்ள இந்த ஓலையைப் படி என்று மெதுவாக ஒருவன் நீட்டினால் அவனைச் சினம் கொண்டு கூவி அடிப்பதற்காகக் கோலைக் கையிலே தூக்கிக் கொள்வான் என்று கூறுகிறார். இதனை அரசும் இன்றைய கால


http://Creativecommons.org//license/by/4.0/.

கட்டங்களில் இந்திய அரசு "இளமையில் கல்" என்ற பழமொழிக்கு ஏற்ப இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 45வது பிரிவின்படி அனைவருக்கும் 14 வயது வரை கட்டாயக் கல்வியை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இதனைப் பின்பற்றினால் அனைவரும் கல்வி கற்றவர்களாகச் சமுதாயத்தில் உலவ முடியும்.

**கல்வியின் பயன்**

கல்வியின் மூலம் மாந்தர் தம் வாழ்வில் பல பயன்களைப் பெற முடியும். கற்க வேண்டிய நூல்களைப் பிழையறக் கற்க வேண்டும். கற்றபின் அந்த நூல்கள் சொல்லும் கருத்துக்களின் படி நின்று வாழ்தல் கல்வியின்சிறப்பாகும். ஒரு பிறப்பில் கல்வி கற்றால் ஏழேழு பிறவிகளிலும் நமக்குப் பாதுகாப்பு அளிக்கும். ஆயிரம் செல்வங்கள் இருந்தாலும் கல்விச் செல்வமே சிறந்த செல்வமாகும். கல்வியானது அறியாமை என்னும் இருளை நீக்கும். ஒழுக்கத்தை வளர்க்கk கல்வி உதவும். ஒழுக்கமும் கல்வியும் இரு கண்கள் போலப் போற்றப்பட வேண்டும். கல்வி போல் சிறந்த ஊன்றுகோல் எதுவுமில்லை. கல்வி என்னும் கருவியைத் தன் வசம் கொண்டவன் சமுதாயத்தில் உயர்ந்த மதிப்பைப் பெறுவான்.

**கட்டாயக்கல்வி**

படிப்புதொடக்கத்தில்சுமையாகஇருந்தாலும்முடிக்கும்பொழுது

மகிழ்ச்சியைத்தரும்என்றகருத்தை,

**"பிடிக்கையிலேதொல்லைஇருக்கும்படித்து**
**முடிக்கையிலேமுற்றும்மகிழ்ச்சி**
**முடித்தபின்புதொட்டதெல்லாம்**
**வெற்றிதுயரின்றிவாழலாம்**
**கட்டாயம்கல்விபயில"**

என்றுவலியுறுத்துகிறார்பாரதிதாசன்.

கல்வியின்முக்கியத்துவத்தைத்தமிழர்கள்மிகநன்றாகஉணர்ந்துஇருந்தனர். சங்ககாலம்முதல்எல்லோருக்கும்கல்விஎன்பதுவற்புறுத்தப்பட்டுள்ளது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**"உற்றுழிஉதவியும்உறுபொருள்கொடுத்தும்**

**பிற்றைநிலைமுனியாதுகற்றல்நன்றே"**

சங்ககாலத் தமிழ்வேந்தன் ஆபத்தில் உதவி செய்வதும் உரிய பொருளைக் கொடுத்தாவது கற்பது நல்லது என்கிறார். இதையே வள்ளுவர்,

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**

**மாடல்ல மற்றை யவை"**

என்றார். பாரதிதாசன் கட்டாயக் கல்விக்காக பாடல்களை எழுதியுள்ளார்.

**ஊனமுற்றோர் கல்வி**

எல்லோருக்கும் கல்வி என்ற இலக்கை அடைய வேண்டுமெனில் நாட்டுமக்களில் குறிப்பிடத்தக்க விழுக்காடு இடத்தைப் பெறும் இயலாநிலைக் குழந்தைகள் கல்வியிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.1982 முதல் நமது மாநிலப் பள்ளி கல்வி இயக்கம், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலமாக இயலா நிலைக் குழந்தைகளுக்கான கல்வித் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது.

தமிழகத்தில் உடல் ஊனமுற்ற குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் இத்தகைய அக்கறை காட்டப்படுவதற்கு முன்பே பாரதிதாசன் உள்ளத்தில் ஊனமுற்றோர் கல்வி குறித்து சிந்தனை முகிழ்ந்தது என்பது கருதத்தக்கது ஆகும்.

**குடும்பமும்**

குடும்பத்தில் கணவன் மனைவி இருவரும் படித்திருந்தால் பிள்ளைகளையும் நன்கு படிக்க வைக்க முடியும் என்பதில் உறுதியான கருத்தைக் கொண்டவர் பாரதிதாசன். குடும்பமானது கல்வியில் நிறைந்து விளங்க வேண்டும் என்பது அறிஞர் அண்ணாவின் ஆவலாக இருந்தது. ஆதலால் குடும்பம் ஒரு


http://Creativecommons.org//license/by/4.0/.

பல்கலைக்கழகம் என்று கூறி சிறப்பித்தார். குடும்பத்தில் கட்டாயம் பெண்கள் படித்து இருக்க வேண்டும் என்பதே பாரதிதாசன் கருத்தாக அமைகிறது.

படிக்காத பெண்ணை ஊமை என்றே குறிப்பிடுகின்றார். குடும்பத்தலைவி படித்தவளாக இருந்தால் அதுவே சிறந்த குடும்பம் என்று குறிப்பிடுகின்றார். நல்ல குடும்பமானது கல்வியில் நிறைந்து விளங்க வேண்டும். கல்வியறிவு இல்லாத குடும்பத்தைக் கடுமையாகச் சாடும் பாரதிதாசன்.

> **“கல்வியில்லாத குடும்பம் இருண்ட வீடு அன்றோஎல்லா நலமும்**
> **ஈந்திடும் கல்வி இல்லா வீட்டை இருண்ட வீடென்க”**

என்று குடும்பத்தில் அனைவரும் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தைப் பாரதிதாசன் வலியுறுத்துகிறார்.

**அடிக்குறிப்புகள்**

1. பாரதிதாசன் பாடல்கள், ப.514
2. பாரதிதாசன் பாடல்கள், ப. 232
3. மேலது1. 125.
4. மேலது 1. 328.
5. குறள் .400
6. பாரதிதாசன் கவிதைகள்,ப.7.
7. மேலது. ப. 343

**நூல் விவரங்கள்**

1. **பாரதிதாசன் - பூம்புகார் பதிப்பகம்** 1992, **சென்னை**
2. **பாரதிதாசன் கவிதைகள்** : **பாவேந்தர் பாடல்களின் முழுத்தொகுப்பு அருள் சுடர் பதிப்பகம்,சென்னை**
3. **அண்ணாதுரை, சி. என். நாவலர் பதிப்பகம்**1951. **திருச்சி**


http://Creativecommons.org//license/by/4.0/.

http://Creativecommons.org//license/by/4.0/.